# BHARATH COLLEGE OF SCIENCE AND MANAGEMENT

Bharath Avenue, Near New Bus Stand, Thanjavur-613005.
www.bharathcollege.edu.in E: bharathcollege@gmail.com
Ph: 04362-227937, 228081, 227707.

## DEPARTMENT OF VISUAL COMMUNICATION

## MOU with TAMIL UNIVERSITY

### FROM 2022 - 5 YEARS

भारतीय गैर न्यायिक

बीस रुपये

Rs.20

ரூ.20

TWENTY RUPEES

सत्यमेव जयते

INDIA

INDIA NON JUDICIAL

Rs: 20-

தமிழ்நாடு तमिलनाडु TAMIL NADU 12-02-2022 03AC 114944

BHARATH COLLEGE OF SCIENCE AND MANAGEMENT THANJAVUR

N. ராஜா
முத்திரைத்தாள் விற்பனையாளர்
உரிமம் எண். 17/2008
V.P. கோவில் தெரு,
தஞ்சாவூர். தமிழ்நாடு.

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

இலக்கியத்துறை

மற்றும்

பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி, தஞ்சாவூர்

காட்சித் தொடர்பியல் துறை

ஆகிய இரு நிறுவனங்களுக்கிடையேயான

# புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறைக்கும் பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி, காட்சித் தொடர்பியல் துறைக்கும் இடையே கல்வி, தொழில்பயிற்சி கருந்தரங்கசார் பரிமாற்றங்கள் மேம்பாட்டுப் பணிகள்

செய்துகொள்வது தொடர்பாகப் புரிந்துணர்வு அடிப்படையில் ஒப்பந்தம் செய்துகொள்ளப் பெறுகிறது.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிகழ்த்தப் பெறும் செயல்பாடுகள் இரு நிறுவனங்களின் தலைவர்களும் அவரவர் சார்பில் நியமிக்கப் பெறும் ஆய்வுத் திறனையும், பட்டறிவுடன் கூடிய ஒருங்கிணைப்பாளரையும் சார்ந்தவையாகும்.

ஒப்பந்தத்தினைக் கொண்டு இரு நிறுவனங்களையும் வேறு எந்த அலுவல் நிலையிலான வேண்டுகோளினையும் கேட்கக் கூடாது.

இரு நிறுவனங்களின் அவ்வப்போதைய நிதிநிலையைப் பொறுத்து நிதிசார் தேவைகளை முறையாகப் பேசிப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒப்பந்தம் குறித்து ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்பெறும். இடையில் நிறுத்திக் கொள்ளவேண்டிய சூழல் ஏற்பட்டால் மூன்றுமாதம் முன்னதாக எழுத்து முறையில் அணுகி முடித்துக் கொள்ளலாம். இல்லையெனில் முறைப்படி பேசி உடன்பாட்டினை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

ஒப்பந்தக் காலத்தில் இரு நிறுவனங்களும் இக்குறிப்பிட்ட பொருண்மைகளில் வெவ்வேறு தளங்களில் தனித்தனியே ஈடுபட்டுக் கொள்ளவும் செயல்படவும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்து தருகின்றது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் அறிவு மேம்பாட்டிற்கு மட்டும் ஏற்படுத்திக் கொள்ளப்பெறுகின்றது. வணிக நோக்கில் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இரு நிறுவனங்களின் பெயர்களை இருவரும் பயன்படுத்துவதற்கு முன்பாக விரிவாகக் கலந்தாய்வு செய்து தொடர்பு கொண்டு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒப்பந்தக் காலத்தில் இரு நிறுவனங்கள் நடத்தத் திட்டமிடப்பெறும் நிகழ்வுகள், கருத்தரங்குகள், கருத்தரங்க முன்மொழிவுகள் அழைப்பிதழ்கள் முதலான அனைத்து ஏற்பாடுகளும் விரிவான, வெளிப்படையான, முறையான கலந்தாய்வுகளின் மூலமாகச் செய்து கொள்ளப்படவேண்டியவை.

இரு நிறுவனங்களும் முன்னரே தீர்மானித்த செயல்பாடுகளைச் செய்தி நிறுவனங்களுக்கு அறிக்கையாக வெளியிடும்பொழுது, இருவரும் எழுத்துவடிவில் இசைவு பெற்றே வெளியிட வேண்டும்.

வரையறுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட துறைகளின் ஆய்வுக் களங்களில் கீழ்க்காணும் பொதுத்தன்மையில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பினை நல்குவது என ஒருமனதாகத் தீர்மானிக்கப்பெற்று இவ்வொப்பந்தம் உருவாக்கப்பெறுகிறது.

தமிழர்களின் பாரம்பரிய கலைகளான சிலம்பம், பறையடித்தல், ஒயிலாட்டம், மயிலாட்டம் போன்றவற்றை மீட்டுருவாக்கம் செய்தல்.

இரு நிறுவனங்களின் மாணவர்களின் படைப்பாக்கத்திறன் மற்றும் இலக்கிய அறிவை மேம்படுத்தும் விதமாக கவிதை, கட்டுரை பேச்சுப்போட்டி நடத்துதல்.

சிறப்புச் சொற்பொழிவுகள், பன்னாட்டு கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் போன்றவற்றை இரு நிறுவனங்களும் இணைந்து நடத்துவதன் மூலமாக பாரம்பரிய கலைகளைப் பாதுகாத்தல்.

மேற்கண்ட ஒப்பந்தம் மூலம் இணைந்து உருவாக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள், தொகுப்பு நூல்கள், குறுந்தகடுகள் முதலான வெளியீடுகளை இரு நிறுவனங்களும் இணைந்து வெளியிடுதல்.

அறிவுசார் கட்டமைப்பு நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் அகத்தூண்டலுக்கும் துலங்களுக்கும் மட்டுமே இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப் பெறுகின்றது.

வேறு ஏதேனும் புதிய நடைமுறைகளைச் செயல்படுத்தவேண்டுமெனில் இரு நிறுவனங்களும் முன்கூட்டியே திட்டமிட்டுக் கலந்து ஆலோசனைச் செய்து பின் எழுதி நடத்திக் கொள்ளலாம். இரு நிறுவனங்களும் இணைந்து நிகழ்த்தும் தத்தம் செயல்பாடுகளைத் தனித்தனியே ஆவணப்படுத்திக் கொள்ளலாம்

ஒவ்வொரு நிறுவனமும் அடுத்த நிறுவனங்களிடமிருந்து பெற்ற தகவல்களை மந்தண அறிக்கைகளாகக் கருதிப் பாதுகாக்கவேண்டும்.

எழுத்து வடிவிலான ஆவண வடிவிலான முன்வரைவுகள் இரு நிறுவனங்களும் நன்கு சோதிக்கப் பெற்றே பரிமாற்றம் செய்து கொள்ளப்படுகின்றன. இவ்வொப்பந்தங்கள் முதல் ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

நாள்:

இடம்: தஞ்சாவூர்

16.02.22

துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்-613 010

16/02/2022

முதல்வர்

பாரத் கல்லூரி

தஞ்சாவூர்-613 005

PRINCIPAL
Bharath College of Science and Management
Bharath Avenue (Near New Bus Stand)
THANJAVUR - 613 005.

சாட்சிகள்

1. பதிவாளர்
   தமிழ்ப் பல்கலைக்கழகம்

2. துறைத்தலைவர்
   இலக்கியத்துறை
   16.02.2022

3. துறைத்தலைவர்
   காட்சித் தொடர்பியல் துறை,
   பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி
   16.02.22